**தலைப்பு 189 – பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 189 – பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு / பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் நடைபெறு வேலை மீதி ரூபா 608,836,986 தொகை எனினும், 2022 இன் ஜனவரி 01 திகயில் உள்ளவாறு அது ரூபா 670,873,053 தொகை என காட்டப்பட்டிருந்தமையால், SA-82 இல் ஆரம்ப மீதி ரூபா 62,036,067 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | இங்கு மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி மற்றும் முன்னைய ஆண்டின் இறுதி மீதியிடையே ரூபா 62,036,067 தொகை வித்தியாசம் காணப்பட்டது. இது அதிரடிப் படையினால் முன்னைய ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த நடைபேறு வேலை கட்டிடங்கள் மற்றும் நிர்மாணவேலை (WIP) தொடர்பாக 2022 ஆண்டின் போது கிடைத்திருந்த பில் பத்திரங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட போது கொடுப்பனவுகளாகக் | கடந்த ஆண்டின் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி என முன்கொண்டுவரப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்பட்டதுடன் அவை CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தப்படுவது முதலாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட மூலதனப்படுத்தப்பட்ட குறியீட்டின் கீழே சேர்க்கப்படல் என குறிப்பிடப்படுவதுடன் (Addition) அதனை CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் புதிய கொள்வனவு ஒன்றென பதியப்படாததுடன் ஆரம்ப மீதியுடன் சேர்க்கப்படுவதனால் ஆரம்ப மீதி மாற்றமடைந்திருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏனைய இயந்திரங்கள் உபகரணங்களின் மீதி ரூபா 2,656,391,978 தொகை எனினும், 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அது ரூபா 2,647,338,195 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் SA-82 இல் ஆரம்ப மீதி ரூபா 9,053,783 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் அந்த தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | மீதிகளிடையே வித்தியாசம் ரூபா 764,640 தொகை 2021 ஆண்டில் விஷேட அதிரடிப் படையினால் கொள்வனவு செய்திருந்த மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றிற்காக செலுத்த வேண்டி இருந்த ஒரு பகுதி செலுத்திய பின்னர் 2022 ஆண்டில் செலுத்திய மீதித் தொகையாகும். அந்த மின்பிறப்பாக்கி கடந்த ஆண்டு சொத்துக்கள் குறியீட்டின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டு இருந்ததுடன் 2022 ஆண்டின் ரூபா 764,640 இற்கான தொகை அக் குறியீடு ஒன்றின் கீழ் சேர்க்கப்பட்டிருந்தது. (Addition) அதன் காரணமாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் புதிய கொள்வனவு ஒன்றென பதிவு செய்யப்படாததுடன், ஆரம்ப மீதியுடன் சேர்க்கப்படுகின்றது.<br><br>அரச கணக்குத் திணைக்களத்தின் மூலம் ஆலோசனைகள் பெறப்பட்டு எதிர்காலத்தில் அதனை சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டின் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி என முன்கொண்டுவரப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டு ரூபா 202,982,036 இற்கான மூலதனச் சொத்துக்கள் தனதாக்கப்பட்டிருந்த போதிலும் அதனை ரூபா 139,073,445 தொகை என SA-82 இல் கொள்வனவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிதி நிலைமைக் கூற்றில் | செலவு விடயங்கள் 2103 மற்றும் 2102 தொடர்பாக ஆண்டிற்கான மொத்த கொள்வனவு என ரூபா 129,891,191 தொகை காட்டப்பட்டிருந்ததுடன், நிதியல்லாத சொத்துக்கள் என சொத்துக்கள் கூற்றில் | மீளாய்வாண்டிற்குரிய ஏற்பாடுகளின் மூலம் பெற்றுக் கொண்ட சொத்துக்கள் தனதாக்கலின் கீழ் காட்டப்பட வேண்டும். |

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 63,908,591 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

காட்டப்பட்டிருந்தது ரூபா 129,126,550 இற்கான சொத்தொன்றே ஆகும். அதன் வித்தியாசம் ரூபா 764,640 தொகையாகும். அந்தத் தொகை 2021 ஆண்டில் அதிரடிப் படையினால் கொள்வனவு செய்திருந்த மின்பிறப்பாக்கிக்காக செலுத்த வேண்டிய தொகையில் பகுதி செலுத்தப்பட்டு 2022 ஆண்டில் செலுத்தப்பட்ட மீதித் தொகையாகும். அந்த மின்பிறப்பாக்கி முன்னைய ஆண்டின் சொத்துக்கள் குறியீட்டின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2022 ஆண்டில் ரூபா 764,640 இற்கான தொகை அக் குறியீட்டின் கீழ் சேர்த்தப்பட்டிருந்தது. (Addition) அத்ன் காரணமாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் புதிய கொள்வனவு ஒன்றென பதிவு செய்யப்படாததுடன், ஆரம்ப மீதியுடன் சேர்க்கப்படுகின்றது.

அதே போல் 2104 (கட்டிடங்கள் மற்றும் நிர்மாணவேலை) செலவு விடயத்திற்குரிய 2022 ஆண்டில் கொள்வனவு என ரூபா 70,261,948 இற்கான தொகையொன்று காட்டப்பட்டிருந்ததுடன், நிதியல்லாத சொத்துக்கள் என சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தது ரூபா 7,118,001 தொகையாகும். அந்த செலவு விடயத்தின் செலவுகள் மற்றும் சொத்துக்களிடையே வித்தியாசம் ரூபா 63,143,943 தொகையாகும். அதிரடிப் படையணியினால் முன்னைய ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த நடைபெறு வேலை எனப்படும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணவேலைகள் (WIP) தொடர்பாக 2022 ஆண்டில் கிடைத்திருந்த பில் பத்திரங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட

கொடுப்பனவுகளாக காணப்பட்டதுடன், அவை CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தப்படுவது முதலாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போது மூலதனப்படுத்தப்பட்ட குறியீட்டின் கீழ் சேர்த்தல் என காணப்பட்டதுடன் (Addition) அது CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் புதிய கொள்வனவு என பதிவு செய்யப்படாததுடன் ஆரம்ப மீதியுடன் காரணமாக நிகழ்ச்சித் திட்டத்தில் புதிய கொள்வனவு ஒன்றென பதிவு செய்யப்படாததுடன் ஆரம்ப மீதியுடன் சேர்க்கப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஏப்ரல் 28 திகதிய 2277/53 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் படி மேற்கொள்ளப்பட்டிருந்த அமைச்சரவை திருத்தத்தின் படி சமூக பொலிஸ் இராஜாங்க அமைச்சின் கருமங்கள் மற்றும் செய்பணிகள் போலவே சமூக பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. இவ்வாறு சொத்துக்கள் உரித்தாக்கும் போது 2022 செப்தெம்பர் 21 திகதிய 06/2022 இலக்கங் கொண்ட பாதீட்டு சுற்றறிக்கையின் பந்தி இலக்கம் 20,21,22 மற்றும் 23 இன் படி நிதியல்லாத சொத்துக்கள் கணக்கீடு செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சரியாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டனவா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக | சமூக பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்பட்ட அனைத்து நிதியல்லாத சொத்துக்களும் அமைச்சுக்கு உரித்தாக்கிய பின்னர் ஏனைய நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்களுக்காக பெறுகைக் கட்டளைகள் அனைத்தும் தற்போது கிடைத்துள்ளதுடன், ஸிகாஸ் மென்பொருளின் மூலம் குறிப்பிட்ட அறிக்கையிடல் அலுவல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | 2022 செப்தெம்பர் 21 திகதிய 06/2022 இலக்கங் கொண்ட பாதீட்டு சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

சமூக பொலிஸ் இராஜாங்க அமைச்சிற்குரிய வாக்குப்படி பேரேடு, நிலையான சொத்துக்கள் பதிவேடு உரித்தாக்கல் தொடர்புடைய நாட்குறிப்பு பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 இலக்கங் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் 3 (xvii) பந்திக்கு இணங்க ஆண்டின் போது செலவுகள் மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் சேமிப்புக்கள் காணப்படின் அவை வருடம் முடிவடைய முன்னர் ஏனைய செலவுகளுக்காக பயன்படுத்தக் கூடாது எனக் காணப்பட்ட போதிலும், 25 செலவு விடயங்களுக்காக ரூபா 91,000 முதல் ரூபா 92,600,000 வரை 22 சதவீதம் முதல் 3000 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் நி.பி. 66/69 இன் மூலம் மாற்றப்பட்டிருந்தது. | தேசிய பாதீட்டு திணைக்களத்தில் இருந்து வாய்மொழி மூலம் கிடைக்கப்பட்ட அறிவுரையின் மீது நான்காவது காலாண்டிற்கான செலவுகள் மற்றும் முன்கொண்டு வரப்பட்ட பொறுப்புக்களை தீர்ப்பதற்காக ஏற்பாடுகள் போதியளவு காணப்படாத செலவு விடயங்களுக்காக 2022.12.22 திகதி நி.பி. 66 அங்கீகாரத்தின் மூலம் ஏற்பாடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு நேரொத்ததாக செயற்பட வேண்டும். |
| (ஆ) | 189-1-03-1701 நட்டங்கள் மற்றும் பதிவழித்தல் செலவு விடயத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் பணம் ஒதுக்கப்பட்டிருக்காத போதிலும் நி.பி. 66/69 இன் கீழ் பெற்றிருந்த ரூபா 9,059,731 இற்கான தொகையொன்று நட்டங்கள் மற்றும் பதிவழித்தல் செலவு விடயத்திற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2022 பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில், விஷேட அதிரடிப் படையின் விபத்துக்குள்ளாகிய வாகனத்திற்காக நி.பி. 109 மோட்டார் வாகனத்தின் நட்டத்தை பதிவழிப்பதற்காக 189-1-3-0-1701 செலவு விடயத்தின் கீழ் செலவுகள் மேற்கொள்வதற்காக தேவையான ஏற்பாடுகள் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடு ஒன்று காணப்பட்டிருக்காததுடன் 2022 ஆண்டின் போதே அத் தேவைப்பாடு ஏற்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் போது எதிர்கால தேவைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 08 செலவு விடயங்களுக்காக நி.பி. 66/69 ஏற்பாடுகள் மாற்றத்தின் கீழ் ஏனைய செலவு விடயங்களில் இருந்து ரூபா 41,866,000 இற்கான ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்த போதிலும் அந்த செலவு விடயங்களில் 65 சதவீதம் முதல் 958 சதவீதத்திற்கு இடைப்பட்ட தொகையினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | 2022 நிதியாண்டில் காலாண்டு அடிப்படையில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், முன்னைய காலாண்டின் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்த போதிலும அடுத்த காலாண்டிற்கு ஏற்பாடுகளை மாற்றும் போது சில சந்தர்ப்பங்களில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்ததுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சேமிப்புக்களை எதிர்பார்க்கும் ஏனைய செலவு விடயங்கள் மூலம் நி.பி. 66 இன் கீழ் ஏற்பாடுகள் மாற்றப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | உச்சமட்ட வினைத் திறனுடன் ஏற்பாடுகளை பயன்படுத்த வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கு அனுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்களில் பின்னிணைப்பு (iii) பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றின் படி பொறுப்புக்கள் ரூபா 219,957,091 தொகையாக இருந்த போதிலும், பொறுப்புக்களை மிகைத்து ரூபா 2,937,860 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் சிகாஸ் தளத்திற்கு தரவேற்றம் செய்வதற்காக வழங்கியிருந்த இறுதித் திகதி 2023.01.20 திகதி வரை கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பில் பத்திரங்கள் பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன், 2023.01.20 திகதியின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சில பில் பத்திரங்கள் பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றில் காட்டுவதற்கு முடியாமல் போனது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் பின்னிணைப்பு (iii) அனைத்து பொறுப்புக்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமப/16/0738/703/033 இலக்கங் கொண்ட 2016 மே 11 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி | பல்வேறு சந்தர்ப்பங்களில் வரிசை அமைச்சுக்கள் மாற்றமடைந்த | எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் |

| | | | |
|---|---|---|---|
| | ஐக்கிய நாடுகளின் அமைதிக் கடமைகளுக்காக விஷேட அதிரடிப் படை யுத்த இராணுவப் படையொன்று மாலி நாட்டில் நிறுவுவதற்கு தேவையான ஆயுத வகைகள், படை வாகனங்கள், நடைமுறை வாகனங்கள் தொலைதொடர்பு உபகரணங்கள் உட்பட ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அமைதிப் படை கடமைகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அன்னிய செலாவணி உழைத்தல், உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்தி, சர்வதேச அனுபவங்களை பெற்றுக் கொள்ளல், உத்தியோகத்தர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல் போன்ற விடயங்களை குறிக்கோளாக கொண்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நேர்முகப் பரீட்சை சபையினால் 160 உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு அதன் பின்னர் பயிற்சி வழங்கப்பட்டதுடன் இந்த செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,779,848,358 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அமைதிப் படைக் கடமைகளுக்கு இணைவதற்கான குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | காரணத்தினால் பெறுகை அலுவல்கள் ஆரம்ப கட்டத்தில் தாமதமடைதல் மற்றும் 2019 ஆண்டில் ஆரம்பமாகிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக தேவையான கொள்வனவுகள் உரிய முறையில் மேற்கொள்ள முடியாமை போலவே 2022 ஆண்டின் பொருளாதார நெருக்கடியுடன் இறக்குமதிகள் கடுமையாக வரையறுக்கப்படல் காரணமாக இறக்குமதி செய்வதற்கான வாகனங்கள், யுத்த உபகரணங்கள் போன்ற அத்தியவசிய பண்டங்கள் கொள்வனவின் போது கனிசமான தாமதம் ஏற்படல் இதற்கு காரணம் என அறிவிக்கப்பட்டிருந்தது. | கொள்ளல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | விஷேட அதிரடிப் படையணிக்கு சாட்டப்பட்டிருந்த கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு போதியளவு மற்றும் வலிமையான தொடர்பாடல் வலையமைப்பொன்று 2017-2020 வரையான காலப் பகுதியில் நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இச் செயற்திட்டத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 195,582,818 தொகையாக இருந்தது. செயற்திட்டத்திற்காக 2018 ஆண்டு இறுதியளவில் ரூபா 160,366,208 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், | வழு நிலைமை ஒன்று மற்றும் குறைபாடுகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் தீர்த்துக் கொள்வதற்காக உடன்படிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அந்த உடன்படிக்கை இந்த செயற்திட்டத்திற்காக உசாத்துணை சேவை வழங்கும் தரப்பினருக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்து செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகள் | திட்டமிடப்பட்டவாறு குறிப்பிட்ட முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2022 ஆண்டு இறுதிவரை இந்த செயற்திட்டத்தின் அலுவல்கள் முழுமையாக முடிவடைந்து இருக்காமை காரணத்தினால் எதிர்பார்த்த வலிமையான தொலைதொடர்பு வலையமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு விஷேட அதிரடிப் படைக்கு இயலாமல் இருந்தது. | மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகளின் அமைதிச் செயற்திட்டத்தின் கடமைகளுக்காக எடுத்துச் செல்வதற்கு 2017 ஆண்டு முதல் இது வரை 42 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கடுகுருந்த, ஹொரண மற்றும் கோனஹேன ஆகிய விஷேட அதிரடிப் படை முகாம்களில் வைக்கப்பட்டு பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், கடுகுருந்த பயிற்சி பாடசாலையில் இந்த கடமைகளுக்கு எடுத்துச் செல்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஏனைய பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த கொள்வனவுக்காக இதுவரை ரூபா 1780 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் 01 வருடம் முதல் 05 வருடம் வரையான காலம் முதல் பராமரிக்கப்பட்டு விளைவற்று காணப்படல் மற்றும் அந்தப் பண்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த உத்தரவாத காலம் பயன்படுத்தப்படாமலேயே முடிவடைந்திருத்தல் மற்றும் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டமையால் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆண்டில் ஆரம்பமான கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக தேவையான கொள்வனவுகள் உரிய முறையில் மேற்கொள்ள இயலாமை இருத்தல், பல்வேறு சந்தர்ப்பங்களில் வரிசை அமைச்சுக்கள் மாற்றமடைந்த காரணமாக செயற்திட்டத்தின் பெறுகை அலுவல்கள் ஆரம்ப கட்டத்தில் தாமதமடைவதில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது, 2022 ஆண்டில் பொருளாதார நெருக்கடியுடன் கடுமையான இறக்குமதி தடை காரணமாக இறக்குமதி செய்ய வேண்டிக் காணப்பட்ட வாகனங்கள் மற்றும் யுத்த உபகரணங்கள் போன்ற அத்தியவசிய பண்டங்களின் கொள்வனவின் போது கணிசமான அளவு தாமதம் ஏற்பட்டிருந்தல் காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விஷேட அதிரடிப் படையணிகள் காணப்படும் 19 காணிகள் மீளாய்வாண்டின் போதும் உரித்தாக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விஷேட அதிரடிப் படையணிக்கு ஏதேனும் காணி ஒன்று உரித்தாக்கும் வரை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான இயலுமை காணப்படவில்லை. அதன் காரணமாக கணக்கீடு மேற்கொள்ள முடியாமை. கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக் காட்டியுள்ள 19 காணிகளில் 03 காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | காணிகளை உரித்தாக்கி கணக்கீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வாகரை, வாழைச்சேனை மற்றும் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி இது வரை பெற்றிருக்கவில்லை. | வாகரை மற்றும் வாழைச்சேனை முகாம்களுக்குரிய பெறுமதி மதிப்பீடு தொடர்பான அறிக்கை அதற்குரிய அம்பாறை பெறுமதி மதிப்பீட்டு அலுவலகத்திற்கு 2022.12.15 திகதி அனுப்பப்பட்டுள்ளது. பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக் கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கவீன உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறல், சேவையிலிருந்து அகற்றுதல் மற்றும் சேவையை விட்டு விலகல் ஆகிய காரணங்களினால் தற்போது சேவையில் காணப்படாத உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய 05 வருடங்களை விட மிகையான கடன்மீதியின் கூட்டுத்தொகை ரூபா 379,850 ஆகும். | 2022.12.31 திகதியில் உள்ளவாறு ரூபா 218,187 தொகைக்கான நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக மாவட்ட நீதிமன்றில் வழக்கு இலக்கம் 2285/20/BMR கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அடுத்த வழக்குத் திகதி 2023.07.17 திகதி நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக போதியளவு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் இரண்டாம் மட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவியில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 15 உத்தியோகத்தர்கள் மிகையாகக் காணப்பட்டனர். | வெற்றிடமாகக் காணப்படும் பதவியணிகளுக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் பொது நிருவாக, உள்நாட்டு அலுவல ்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் 2022.04.28 திகதிய 2257/53 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் சமூகப் பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சினால் இந்த அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்தனர். அதன் படி சமூக பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சில் இருந்து 14 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள ் இந்த அமைச்சுக்கு இணைக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக கவனம் செலுத்துதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை திருத்திக் கொள ்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2018 ஜனவரி 24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள ்ள இணைப்பு 02 இல் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் மனிதவளத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020, 2021 ஆண்டுகளில் கொவிட் 19 நிலைமை காரணமாக பதவியணியினரின் வரவு வரையறையாக இருந்தமையால் மனிதவளத் திட்டம் தயாரித்தலில் தாமதம் ஏற்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க மனிதவள அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | விஷேட அதிரடிப் படை சேனையின் சீருடை பதவியணி அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 10743 காணப்பட்ட போதிலும் 3191 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அது 30 சதவீதத்தை கொண்டிருந்தது. | பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் 300 பேர் 2022.04.20 திகதி கடுகுருந்த பயிற்சி பாடசாலைக்கு ஆட்சேர்ப்பதற்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டு இருந்ததுடன் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக | காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படும் ஏற்பாடுகள் போதியளவாக இன்மை மற்றும் மேலதிக ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையினால் ஆட்சேர்ப்பு வரையறுக்கப்பட்டிருந்த காரணத்தினால் பயிலுனர் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு அலுவல்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (iv) | விஷேட அதிரடிப் படையின் மகளிர் பிரதான பொலிஸ் பரிசோதகர் 03 பேரும், பொலிஸ் பரிசோதகர் 76 பேரும், பொலிஸ் சார்ஜன்ட் பதவியில் 40 உத்தியோகத்தர்களும், மகளிர் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் மற்றும் பொலிஸ் சாரதிகள் 36 பேரும் மிகையாக சேவையில் ஈடுபட்டிருந்தனர். | மிகையாக காணப்படும் பின்வரும் பதவிகள் அமைச்சரவை அங்கீகாரத்தின் படி 2018.12.31 திகதியில் உள்ளவாறு சேவை காலத்தை அடிப்படையாகக் கொண்டு வெற்றிடங்களை கவனத்தில் எடுக்காமல் ஒரு தடவைக்கு மாத்திரம் செயற்படு விதமாக வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட முறையில் காலத்திற்கு உகந்த அடிப்படை மீது பதவியுயர்வு வழங்கப்பட்ட காரணத்தினால் ஏற்பட்டிருந்த பதவிகள் என அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு கவனம் செலுத்த வேண்டும். |
| (v) | விஷேட அதிரடிப் படையின் சிவில் பதவியணிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 709 ஆக இருந்த போதிலும், 180 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவை 25 சதவீதத்தினை கொண்டிருந்தது. | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த சிவில் பதவியணி வெற்றிடங்கள் உத்தியோகத்தர்கள் வருடாந்தம் ஓய்வுபெறல் காரணமாக ஏற்பட்டிருந்ததுடன், வெற்றிடங்களை நிரப்புதல் அதற்குரிய தரவுகள் சிவில் நிருவாக பணிப்பாளர் மூலம் பொது நிருவாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>அதே போல் ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் அதற்கு மாற்றுவழியாக பல்கரும அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் பல்கரும உதவியாளர் சேவையில் 144 பேர் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 36 பேர் தற்போது விஷேட அதிரடி படை சேவையில் ஈடுபட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதில் கவனம் செலுத்த வேண்டும். |